[1986 மே 13

பிரிவு 1.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In clause 1, for sub-clause (2) substitute the following (2) It shall be deemed to have come into force on the 11th day of May 1986."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1986), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

(ஊஊ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1986)**ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதை எதிர்ப்பதற்கான மூலகாரணமே

**1986 ஆம் ஆண்டு சனவரி 29 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(திரு. ப. பொன்னுரங்கம்) [1986 மே 13

இதைக் கொண்டு வந்த முறையை எதிர்த்துத்தானே தவிர, சட்டத்தைப்பற்றி அல்ல. நான் இந்தச் சட்டத்தின்மீது பலமுறை பேசியிருக்கிறேன். 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியோடு லேப்ஸ் ஆகிறது, பிறகு நீங்கள் ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்தது மாதிரி கொண்டு வருகிறீர்கள். 1985 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24 ஆம் தேதியிலிருந்தே, மணிலெண்டர்ஸ் இருக்கிறார்களே அவர்கள் கோர்ட்டுக்குக்கூடப் போகலாம், பெட்டிஷன்கூடப் போடலாம். போடக்கூடாது என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் அந்தத் தேதியில் சட்டமே இல்லை. Atleast you could have issued an Ordinance. இந்தச் சட்டத்தைப் பாஸ் செய்கின்ற வரையில் அந்தக் கட்டுப்பாடு இல்லை; in between the dates Act இல்லை. ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து, கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சொல்கிறீர்கள். ஆனால் சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள் போய் இருக்கிறார்கள் என்று தெரிகிறது, பெட்டிஷன் போட்டிருப்பதாகத் தகவல். இதனால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள். ஏழைகளைப் பாதுகாப்பதற்காக இந்தச் சட்டத்தை முறையாகக் கொண்டு வந்திருக்க வேண்டுமென்றால் என்ன செய்திருக்க வேண்டும்? 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் தேதியிலேயே கொண்டு வந்திருக்க வேண்டும். அப்படி அந்த நேரத்தில் சட்டமன்றம் இல்லை, செஷன் இல்லை, ஆகவே கொண்டு வர முடியவில்லை என்று சொன்னால், அட்லீஸ்ட் ஒரு ஆர்டினன்ஸையாவது போட்டிருக்கலாம், அதற்கும் கவர்னருக்கு ரொம்ப வேலை, அதனால் ஆர்டினன்ஸ் போட முடியவில்லை என்று சொன்னால், நாம் பல சட்டங்களை ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் கொடுத்து எக்சிகியூட்டிவ் அத்தாரிட்டீஸ் மூலம் உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த முறையிலேயாவது செய்திருக்கலாம். ஆனால் இப்படியெல்லாம் உரிய நேரத்திலே இதைக் கொண்டு வராத காரணத்தினாலே பெரும்பாலானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல மணிலெண்டர்ஸ், பான்புரோக்கர்ஸ் ஹைகோர்ட்டிலே அப்பிளிகேஷன் எல்லாம் போட்டிருப்பதாகத் தகவல். இந்தச் சட்டத்தின் மூலத் தன்மைகளையே இப்படி நாம் முறித்துவிடுகிறோம். எந்த ஏழை மக்களுக்கு, எந்தப் பாமர மக்களுக்கு, எந்த வருவாய் குறைந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கொண்டு வருகிறோமோ அந்தக் குறிக்கோளே அடிபட்டுப் போய்விடுகிறது. up to 23rd August 1985 என்று சொல்கிறீர்கள். 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் தேதி இந்தச் சட்டமே கிடையாது. இந்தச் சட்டம் இல்லையென்றால் பான் புரோக்கர்ஸ், மணிலெண்டர்ஸ் ஆகியவர்கள் தங்களுக்கு ரிலாக்சேஷன் வேண்டும், சட்டம் இல்லை, அடமானம் பெற்ற பொருட்களை ஏலத்தில் விடலாம் என்று சொல்லிப் போனால் அது செல்லுபடிகூட ஆகலாம். இந்த எட்டு மாதங்களில் என்னென்ன தில்லுமுல்லுகள் நடந்திருக்கும் என்பதை சட்ட அமைச்சரவர்கள் அறிவார்கள். ஆக, ஒவ்வொரு முறையும் இப்படிப்பட்ட இடைவெளி தந்துதான் வந்து இருக்கிறது.

1986 மே 13]

3 மாதம், 6 மாதம், இப்பொழுது 8 மாதம், இன்னும் கொஞ்சம் நாள் போனால், அடுத்து, 1 வருடம் கூட வரும் போல் இருக்கிறது. ஆகவே, இப்படி இடைவெளி வராமல் இதைப் போலச் சட்டங்களைக் கொண்டு வரும்போது, (Eaither the Executive authority or the Governer., or the Assembly) இதுபோன்ற சட்டங்களை பாஸ் பண்ணவேண்டும். அதற்காகத்தான் எதிர்ப்பே தவிர, இந்தச் சட்டத்திற்கு அல்ல.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணம் திருத்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், இந்தச் சட்ட முன்வடிவு, எந்த நோக்கத்திற்காக, 1982 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டதோ, அதிலே ஒரு அடி கூட முன்னேற்றம் ஏற்படவில்லை. அந்த அளவுக்கு அது கவனிக்கப்படாத ஒன்றாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக்கூடிய முறையிலேதான் இதிலே கருத்தைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, 1980 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 2,400 ஆண்டு வருமானம் உள்ளவர்கள், தனியார்களிடம் பெற்றிருக்கக்கூடிய கடன்களிலிருந்து நிவாரணம் பெற வழிவகை செய்யப்பட்டது. பிறகு, 50/82 என்ற சட்டத்தின்கீழ், 1982 ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டு வருமானம் ரூ. 4,800 பெறுபவர்கள் கடன் நிவாரணம்பெற, இவர்கள் தனியார்களிடம் பெற்றிருக்கக்கூடிய கடன்களிலிருந்து நிவாரணம் பெற, வகை செய்யப்பட்டுவிட்டது.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் குறிப்பிட்டதைப் போல், 24, ஆகஸ்ட் 1985 லிருந்து சட்டமே இல்லாதிருந்து, அவசரச் சட்டமும் இல்லாமலிருந்து, இப்பொழுது இந்தச் சட்டத்தைப் பின்தேதியிட்டு அமுலுக்குக் கொண்டு வருவதற்கிடையிலே பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. பல இடங்களில் ஏலம் விடப்பட்டிருக்கின்றன. ஏழைகளுடைய நகைகள், பண்ட பாத்திரங்கள் எல்லாம் ஏலம் விடப்பட்டு, செட்டில் செய்யப்படுகின்றன. ஆனால், மனத்திருப்திக்காக, நோக்க காரண விளக்கங்களிலே, தமிழ்நாடு சட்டம் 50/82-ன் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையானது மிகவும் குறைவாக உள்ளது என்று தெரிய வந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. ஆக, விண்ணப்பங்கள் குறைவாக இருக்கிற காரணத்தாலே, விண்ணப்பம் கொடுப்பதற்கான காலத்தை நீட்டிப்பதுதான் இந்தத் திருத்தத்தினுடைய முக்கிய நோக்கமாக இருக்கிறதே தவிர, கடன் பெற்றவர்களுக்கு நிவாரணத்தை அளிக்கக்கூடிய வகையில் இது ஏற்படுத்தப்படவில்லை. எந்தக்கால அளவுக்குள் மனு செய்ய வேண்டும் என்பதை இன்னும் அறியாமல் இருக்கிறார்கள், கிராமத்திலேயிருக்கிற சாதாரண ஏழைகள், எந்தக் காலத்திற்குள் மனுசெய்து கொள்வது என்பதுபற்றி அறியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவகாசம் கொடுப்பதற்கு இந்த நீடிப்பு கொடுக்கிறோம்

[திரு கோ. வீரய்யன்] [1986 மே 13

என்று சொல்கிறார்கள். 1982 லிருந்து கிட்டத்தட்ட 4, 5 முறைகள் திருப்பி, திருப்பி அவகாசம் தருகிறோம் என்று சொல் கிறார்கள். ஆனால் விஷயம் என்ன? அந்த அளவு குறுகிய அந்த மனுக்கள் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கின்றது என்ற நிலைமை ஏற்பட்டிருக்குமானால் கொடுத்த மனுக்களுக்கு நிவாரணம் கிடைத்திருக்குமானால், மற் றவர்களும் மனுக்கள் கொடுக்க தூண்டுதல் ஏற்படுத்தி இருக்க முடியும். அப்படிப்பட்ட நிலையில், தாசில்தார்களிடம் மனுக் களைக் கொடுத்து, தாசில்தார்கள் மனுக்களை மூட்டை கட்டி, பையில் வைத்து, அதை விசாரித்து, நடவடிக்கை எடுக்காமல் இருக்கிற காரணத்தால், மனு கொடுப்பதால், எந்த நிவாரண மும் கிடைக்கப் போவதில்லை. அந்த பான் புரோக்கர்களும் கடன் வாங்கியவர்களும் ஏதாவது பேரம் பேசிக்கொண்டு கடனை ஓரளவு தள்ளுபடி செய்து, செட்டில் செய்து விடலாம் என்ற அளவுக்கு, சாதாரண ஏழைகள் கொடுத்திருக்கிற மனுக்க ளின்மீது இதுவரை எத்தனை மனுக்கள் பைசல் செய்யப்பட்டிருக் கின்றன, அதனால் பயன் அடைந்தவர்கள் எத்தனை பேர்கள். தொகை எவ்வளவு என்ற விவரத்தை அரசு அறிவிக்குமானால், மற்றவர்கள் மனு கொடுக்க வாய்ப்பு ஏற்படும். எனக்குத் தெரிந் தவரை 6 முறைகள், 6 மாதம் 6 மாதம் என்று மனு கொடுக்க அவகாசம் நீட்டிக்கப்படுகிறதே தவிர அந்த மனுக்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அவகாசத்தை நிர்ணயித்து, அதைத் தீர்த்து வைக்க நடவடிக்கைகள் எதுவும் செய்யப்படாமல் இருக் கிறது. தாசில்தார் இன்கம் சர்ட்டிபிகேட் வழங்கவேண்டி யிருக்கிறது. அதே தாசில்தார்தான் நீதிபதியாகவும் இருக்கிறார்.

(மாலை 5—00)

எனவே தாசில்தார் ரூ. 4,500 க்குள் வருமானம் உள்ளவர்களுக்கு சர்டிபிகேட் கொடுக்க வேண்டும். அதற்கு பிறகு அவரே விசாரணை நடத்தவேண்டும். அவரே மனுக்களை வாங்கி வைக்க வேண்டும். எல்லாவற்றையும் அவரே கட்டி வைத் திருக்கிறார். ரெகுலர் தாசில்தார் பொறுப்பில் இருப்ப தனால் பல வேலைகளில் அவர்களால் இதை கவனிக்க முடியவில்லை. சம்பிரதாயமாக சாதாரண மக்களுக்கு, எந்த ஒரு நிவாரணமும் இல்லாத ஒரு கடன் நிவாரணச் சட்ட மாகத்தான் இது இருக்கின்றதே தவிர, நடைமுறையில் வந் திருக்கின்ற மனுக்களையாவது, ஒரு குறிப்பிட்ட காலத்திற் குள் பைசல் செய்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற நடவடிக்கையை எடுத்து, அதற்கு பிறகு மனு போடாதவர் களை மனு போடுங்கள் என்று சொல்லுகின்ற முறைதான் சரியாக இருக்க முடியும். அந்த முறையிலே இந்தச் சட்டத் தினுடைய அடிப்படையான நோக்கத்தை இன்று நடைமுறைப் படுத்த முடியாத ஒரு நிலை இருக்கிறது. சட்டத்துறை அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்தி இந்தச்

1986 மே 13] [திரு பொ. உத்திராபதி]

சட்டத்தினுடைய அடிப்படையான நோக்கத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அவகாசம் கொடுப்பதினால் எந்தவித பயனும் இருக்காது. அந்த அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுகின்ற சட்டத்தை அமுல் நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கோரி இந்த திருத்தத்தை நான் வரவேற்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் நிவாரண திருத்தகள் சட்டத்தின் மீது நான் ஒரு சில யோசனைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலிலே நான் இந்த சட்டத்தை வரவேற்கிறேன். முதன் முதலில் இந்த சட்டமன்றத்தில், இந்த கடன் வாங்கியவர்கள், கடன் திருப்பிக்கொடுக்க முடியாத நிலையில் வாழக் கூடியவர்களுக்கு இந்த சலுகை அளிப்பதற்கு சட்டம் கொண்டு வந்தோம். சட்டம் கொண்டுவருகின்றபோது எல்லோருமே அதை ஆதரித்தோம். தொடர்ந்து சட்டத்தை திருத்தி வருகிறோமே தவிர, இந்த சட்டத்தினால் பலன் அடைந்தவர்கள் எவ்வளவு பேர் என்று பார்த்தால், அநேகமாக நம்முடைய அரசு எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு இல்லை. காரணம் இன்றைக்கு சாதாரணமாக வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள் விவசாயத் தொழிலாளர்கள்தான். தன் கையில் இருக்கக் கூடிய தவலை, செப்புக்குடம், தோடு இப்படி நகைகளை விற்று வந்தார்கள். ஒரு விவசாயத் தொழிலாளிக்கு கூலி ரூ. 10 என்று இன்றைக்கு இருக்கிறது. குடும்பத்தில் 8 பேர்கள் இருந்தால், இந்த 5 பேரும் ஒரு வருடம் வேலை செய்ததாக கணக்கு போட்டுப் பார்க்கின்றபோது 5,000, 6,000 என்று கணக்கிலே வந்துவிடுறது. விவசாயத் தொழிலாளிகளுக்கு, கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்கு ஒரு வருடம் பூராவும் வேலை கிடைக்கிறதா என்று பார்த்தால் விவசாயத்தில் குறைந்த பட்சம் 120, 140 நாட்களுக்கு மேலே அவர்களுக்கு வேலை கிடையாது. தாசில்தார் இந்த வேலையை, நாள் கணக்கில் போடுகிறார். வருமானத்தைப் பார்த்தால் கிட்டத்தட்ட இந்த சட்டத்தின் பெயரால் கிராமப்புறத்தில் வாழக்கூடியவர்கள் பெரும்பகுதி பேர்கள் இந்தச் சலுகையை பெற்றிருக்கமுடியும். ஆனால் இன்றைக்கு இந்த அளவுக்கு சலுகை பெறுவதற்கு வாய்ப்பு கிடையாது. லட்சக்கணக்கில் மனுக்களைப் பெற்றார்களே தவிர, அந்த மனுக்களை இன்றைக்கு பூரணமாக பரிசீலனை செய்து இந்த நிவாரணம் யாருக்கு கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு கிடைக்கக்கூடிய அளவிற்கு இன்றைக்கு அதிகாரிகளுடைய நடவடிக்கை அமையவில்லை. யாருக்கு நிவாரணம் கிடைக்கிறது என்றால் இப்படி ஒரு தவறான புள்ளிவிவரம் போட்டு கணக்கு காண்பித்ததன் மூலமாக யாருக்கு கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு கிடைக்காமல், அந்த அடகு பிடித்தவர்களுக்குத்தான் அதிகமான நிவாரணம் கிடைக்கக் கூடிய அளவிற்கு இன்றையதினம் இந்த நிவாரணம் சென்று

கொண்டிருக்கிறது. சட்டம் நல்ல சட்டம். அமைச்சருடைய நோக்கம் நல்ல நோக்கம். இதை நிறைவேற்ற வேண்டு மானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நல்ல நோக்கத்தோடு இந்த நிவாரணம் யாருக்கு கிடைக்கவேண்டுமோ அவர்களுக்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால், திருத்தப்பட்ட சட்டப்படி அந்த மக்களுக்கு போய் சேரும். அந்த அடிப் படையில் இந்த மனுக்களை பைசல் செய்வதற்கு, ஏதாவது புதியதாக ஒரு மாற்றத்தை கொண்டுவரவேண்டும். இந்த அதிகாரிகளுக்கு முழுமையான அதிகாரத்தை வழங்காமல், யார் நிரூபிக்க வேண்டுமென்றால், கடன் பெற்றவர் வருமானத்தை நிரூபித்து, அவர் கடனிலிருந்து விடுபடவேண்டுமே தவிர, அதிகாரி மூலமாக இந்த வருமானத்தினுடைய கணக்கை போடச் சொன்னால் - உங்களுக்கு தெரியாத விவரத்தை நான் சொல்லவில்லை-ரெவின்யூ துறையானாலும் எந்தத் துறையாக இருந்தாலும் கீழே இருக்கக்கூடிய அதிகாரிகளால் எந்த அளவுக்கு கடனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறது என்று தெரியவில்லை.

எனவே அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலாவது சம்பந் தப்பட்ட அதிகாரிகளை அழைத்து எந்தெந்த ஜில்லாக்களில், எந்தெந்த தாலுக்காக்களில் இந்த கடன் நிவாரணம் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்று சட்டத் திருத்தம் கொண்டு வருகிறோமோ உண்மையிலேயே அவர்களுக்கு போய் சேரு கிறதா, அப்படி போய் சேரவில்லை என்றால் அதற்கு என்ன காரணம் இடையில் இந்தத் தடங்கலுக்கு யார் காரணம் என்று அறிய கூட்டத்தை கூட்டி இந்தத் தடங்கல் களை அகற்றி உண்மையிலேயே யாருக்கு நிவாரணம் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்குக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறி திருத்த சட்டத்தை ஆதரித்து அமர் கின்றேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் பேசுகிறபோது ஏழை, எளிய மக்களின் நலனுக்காகக் கொண்டுவரப்பட்டிருக் கிற இந்தச் சட்டம் பின்னோக்கி ஒரு தேதியிட்டு கொண்டு வரப்பட்டிருக்கிற காரணத்தால் இடைப்பட்ட இந்தக் காலத்தில் அந்த மக்களுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்பட்டிருக் காதா என்று வினா தொடுத்தார்கள். இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தைப் பொறுத்தவரையில் 1976-ஆம் ஆண்டு முதன்முதலாகக் கொண்டு வரப்பட்ட கடன் நிவாரணச் சட்டம் போதிய அளவுக்கு மக்களுக்குப் பலனை ஈட்டவில்லை என்ற நோக்கத்தோடு அதைப்பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு தான் இதற்கு மாற்றாக 1979-ஆம் ஆண்டு நகர்ப்புறத்தில் இருக்கிற, கிராமப்புறத்தில் இருக்கிற நலிந்த பிரிவினர் 2,400 ரூபாய்க்குக் கீழ் வருமானம் உள்ளவர்கள் அனைவருக்

கும் பலன் கிட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதை அடுத்து 1980-ஆம் ஆண்டு 4,800 ரூபாய்க்குக் கீழ் வருமானம் உள்ள நகர்ப்புறத்தில் உள்ள, கிராமப் புறத்தில் உள்ள நலிந்த பிரிவினருக்குப் பலன் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு சட்டம் கொண்டு வரப்பட்டது.

அதன்பிறகு 6 மாதத்திற்கு ஒரு முறை இந்தச் சட்டம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டது. ஆனால் அப்படி நீட்டிக்கப் படுகிறபோது இடையிலே அவ்வப்போது சற்று காலதாமதம் ஏற்பட்டு பின்னோக்கி, ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கப்பட்டதால் பாதிப்பு ஏற்படாதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் கேட்டார்கள். அப்படி பின்னோக்கி இந்தச் சட்டத்தைச் செல்திறன் ஆக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் ஒவ்வொரு முறையும் இந்த சட்ட நீட்டிப்புக்கு மத்திய அரசினுடைய அனுமதியை நாம் பெறவேண்டி இருக்கிறது. மத்திய அரசின் அனுமதி பெறுகிற நடவடிக்கை எடுக்கிறபோது சிறிது காலதாமதம் ஆகிவிட்டது. ஆனால் தற்போது கூட மத்திய அரசினுடைய அனுமதி நமக்குக் கிடைத்தவுடன் அதாவது கிடைத்த ஒருவார காலத்திற்குள் சட்டமன்றம் கூடுகிற நோட்டிபிக்கேஷன் வந்துவிட்ட காரணத்தால் சட்டமன்றத்தில் நிறைவேற்றவேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்ட காரணத்தால் அந்த அடிப்படையில் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப் பட்டிருக்கிறது. பின்னோக்கி போடுகிறபோது இந்த இடைப் பட்ட காலத்தில் அதாவது இந்தச் சட்டம் செயலில் இல்லாத காலத்தில் ஏழை எளியவர்களுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை மட்டும் அவைக்கு நான் சொல்ல விரும்புகிறேன். தொடர்புடைய அதிகாரிகளோடு இது குறித்து கலந்து பேசி தக்க நடவடிக்கையை நிர்வாக ரீதியாக அரசு எடுத்திருக்கிறது. இந்த இடைப்பட்ட காலத்தில், ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்த அந்த கால கட்டத்திற்குள் யாரும் ஏழை, எளியவர்களை பாதிப்பது என்பது நடக்க வில்லை. (First action at tne Administr tive level of the Government.) நிர்வாக ரீதியில் எந்த ஒரு மனுவும் இது குறித்து முடிவுக்கு எடுக்கப்பட வில்லை என்பதை அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்தினால் பலன் ஏதும் உண்டா, எதிர்பார்த்த பலன் உண்டா என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்களும், திரு. பொ. உத்திராபதி அவர்களும் எழுப்பினார்கள். இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு வெளியே எண்ணுகிற எண்ணத்தை விட அதிகமான பேருக்கு உண்மைப் பலன் கிட்டியிருக்கிறது. 1979-ஆம் ஆண்டு இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு கிட்டத்தட்ட 91,480 மனுக்கள் பெறப்பட்டன. அந்த மனுக்கள் இது வரையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை

(திரு சி. பொன்னையன்) [1986 மே 13

என்றும், ஏழைகளுக்கு அதில் பாதகம் ஏற்படக்கூடிய அளவுக்குக் காலதாமதம் ஏற்படுகிறது என்றும் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. 1980-ஆம் ஆண்டு இச்சட்டம் வந்து இரண்டு முறை நீட்டிக்கப்பட்ட பிறகு 949 மனுக்கள் வரப்பட்டு அதிலே தற்போது நிலுவையில் இருக்கின்ற மனுக்கள் 390 மட்டும் தான். மீதி எல்லாம் பைசல் ஆக்கப்பட்டு இருக்கின்றன.

3,45,08,017 ரூபாய் ஏழை எளியவர்களுக்கு 1980-ம் ஆண்டுச் சட்டத்தால் பலன் கிட்டி இருக்கிறது. 1982-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் நடைமுறைக்கு வந்து அதனால் 24,125 மனுக்கள் பெறப்பட்டதில் 821 மனுக்கள் இதுவரையில் நிலுவையில் இருக்கின்றன. மீதி எல்லாம் தீர்க்கப்பட்டு இருக்கின்றன. அந்த 24,125 மனுக்களில் 33,13,289 ரூபாய் ஏழை எளியவர்களுக்குப் பலனாக இந்தச் சட்டத்தினால் கிடைத்திருக்கிறது.

(மாலை 5–10)

அதிலேயிருந்து இந்தச் சட்டத்தினால் பலன் இல்லை என்று அல்ல, நாம் எதிர் பார்ப்பதை விட அதிகமான பலன் கிடைத்திருக்கிறது. இன்னும் மிக அதிகமாகத் தரப்பட வேண்டும், பட்டி தொட்டிகளில் இருக்கின்ற மக்களுக்கு எல்லாம் அந்த நிலைமையை போதிய அளவுக்கு தெரியப்படுத்த வேண்டும், விவரங்கள் அவர்களுடைய காதுக்குச் சென்று எட்டாத நிலை ஏற்பட்டு விடக் கூடாது, அதனால் பாதிப்பு ஏற்பட்டு விடக் கூடாது என்ற காரணத்தால் ரேடியோ, டெலிவிஷன் போன்ற பல்வேறு சாதனங்களின் மூலம் விளம்பரம் செய்கிறோம். ஆறு ஆறுமாதக் காலம் நீட்டிப்பு அவர்களுக்குத் தந்து கொண்டு வருகிறோம். ஏழைகளுக்கு உண்மையிலேயே போதிய பலன் கிட்டி வருகிறது என்பது தான் அரசினுடைய கருத்து.

அந்த இடைப்பட்ட காலக் கட்டத்தில் ஏழைகளுக்கு, சாதாரண நலிந்த பிரிவு மக்களுக்கு கடன் வசதி கிடைக்காத ஒரு இன்னல் இடர்ப்பாடு ஏற்படக் கூடாது என்பதற்காக அரசு முக்கியமாக நடவடிக்கை எடுத்து, தமிழகத்திலே இருக்கிற கிட்டத்தட்ட 2,076 கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக 1984 ஆம் ஆண்டு பிரத்தியேகமாக நகைக் கடன் தரவேண்டும் என்று ஆணையை அரசு இட்டிருக்கிறது. அதன் காரணமாக 1984–85 ஆவது ஆண்டில் மட்டும் 11 இலட்சத்து 35 ஆயிரம் நபர்களுக்கு 218 கோடி ரூபாயை நகைக் கடனாக அரசு தர நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதைப் போலவே 1985-86ல் 241 கோடி ரூபாயை நகைக் கடனாக நலிந்த பிரிவினர்களுக்கு தரப்பட்டு இருக்கிறது.

1986 மே 13] [திரு. சி. பொன்னையன்]

1984–85 இல் தேசிய சேவா கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக *65* கோடியும் *1985–86* இல் *81* கோடியும் நகைக் கடனாக நலிந்த பிரிவினர்களுக்குத் தர அரசு முடிவு எடுத்திருந்த நிலையில் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதுபோன்ற நகைக் கடன் கொடுக்க யாரும் முன் வராத நிலையில், அவர்கள் பாதிப்புக்கு உள்ளாகக் கூடாது என்ற நோக்கத்தோடு இந்த அரசு நடவடிக்கை எடுத்த காரணத்தால் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் கடன் தர அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. அதற்காகவே இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தை மேலும் நீட்டிக்க அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவு ஏழைகளின் நலனைக் காக்கிற சட்ட முன்வடிவு என்பதால் அவை இதனை ஏற்கவேண்டும் என்று வேண்டுகிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதிலே நகைக் கடன் வழங்குவது முழுவதும் ஏழைகளுக்கும், நலிந்த பிரிவினர்களுக்குமே போய்ச் சேருகின்ற வகையிலே இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு ஆண்டுக்கு ரூ. 4,800 வருமானம் வரக்கூடிய சாதாரண ஏழைகளுக்கு, இந்த நகைக் கடன் எல்லாம் 10 15 சதவீதம் தான் போய்ச் சேருகிறது. அதற்கு மேல் வசதி படைத்தவர்களுக்குத்தான் போய் சேருகிறது. அந்த நிலையில் கடன் வழங்கியது பூராவும் நலிந்த பிரிவினர்களுக்காகவே வழங்கியிருக்கிறோம் என்று அமைச்சர் சொன்னதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நகைக் கடன் என்பது நலிந்த பிரிவினர்களுக்கு மட்டும் அல்ல. நலிந்த பிரிவினர்கள் உட்பட எல்லோருக்கும் தான் வழங்கப்படுகிறது. ஆனால் நலிந்த பிரிவினர்களுக்கு முன் உரிமை தரச் சொல்லி, அரசு கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''*1986* ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் *25/1986*) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

1986 மே 13]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(எஎ) மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு 1986

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1986) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த சட்டமுன்வடிவை நான் ஆதரித்தாலும் அதிலே ஒன்றிரண்டு கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இதன் காரண நோக்க விளக்கத்திலே அந்தத் தனியார் சிறப்பு பேருந்துகள் எனப்படும் ஆம்னி பஸ்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். சுற்றுலா பயணிகளை ஏற்றிச் செல்வதற்காகத்தான் இந்தப் பேருந்துகளுக்கு அனுமதி வழங்கப்பட்டாலும் கூட, அவை சுற்றுலா பயணிகள் மட்டுமே ஏறிச் செல்கிற பேருந்துகளாக இல்லாமல் வழக்கமான பயணிகள் செல்கிற பேருந்துகளாகத் தான் அவைகள் தற்போது இருக்கின்றன.

அதை ஒழுங்கு படுத்துவதற்கும், தவறாக அந்தப் பேருந்துகளை உபயோகிப்பவர்களைத் தண்டிக்கிற வகையிலும் இங்கே பல கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதிலே முக்கியமான கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

---

* 1986 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.